செ.வெ.எண்: 17 நாள்: 07.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள பதிவேடுகளை முறையாக பராமரிக்க வேண்டும் -மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது.

தமிழக அரசு வருவாய்த்துறையின் கீழ் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சான்றிதழ்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகள் குறித்த பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இன்று (07.09.2016) குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பல்வேறு பதிவேடுகள் மற்றும் பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், இந்த ஆய்வில் 8ஏ பதிவேடு, ஒருங்கிணைந்த காலமுறை பதிவேடு, எல்லைக்கோடு மனுக்கள் பதிவேடு, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பதிவேடு, பணியாளர் வருகைப்பதிவேடு, நீதிமன்ற உத்தரவின்படி கண்டறியப்பட்ட ஆக்கிரமனம் பதிவேடு, கணினி சிட்டா விண்ணப்ப பதிவேடு, முதியோர் உதவித்தொகை விண்ணபப்பதிவேடு, வழக்குப்பதிவேடு, தடையாணைப்பதிவேடு, பட்டாமாறுதல் முழுபுலம் பதிவேடு, நில ஒப்படைப்பதிவேடு, பணப்பதிவேடு, நிலைய முன்பண பதிவேடு, கோப்புகள் அழிக்கும் பதிவேடுகள், சுத்தநகல் பதிவேட்டின் நடப்பு குறிப்பு பதிவேடு, முதல் பட்டதாரி சான்று வழங்கும் பதிவேடு, தபால் பதிவேடு, சிறப்புபதிவேடு, வாரிசு சான்று பதிவேடு, சொத்துமதிப்பு சான்று பதிவேடு, நகல் மனு பதிவேடு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பதிவேடு மற்றும் தினசரி மழை அளவு பதிவேடு ஆகியவை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வைப்பறை பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இந்த ஆய்வின் போது, முக்கியமான பதிவேடுகள் மற்றும் கோப்புகளை பதிவறைகளில் தரம்பிரித்து வைத்து பராமரிக்கவும், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சான்றிதழ்களை தாமதமின்றி வழங்கவும், வட்டாட்சியர் அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வரும் அனைத்து பதிவேடுகளையும் முறையாக உரிய முறையில் பராமரிக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, வட்டாட்சியர்கள் திருமதி.பா.கிருஷ்ணவேணி(குளத்தூர்), திரு.கண்ணாகருப்பையா(நீதியியல்) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**